| | | |
|---|---|---|
| O.S No. | : | 75/2023 |
| DATE | : | 05.06.2025 |
| NAME | : | சீனுவாசன் |
| தந்தை பெயர் | : | விஸ்வநாதன் |

**வா.சா.1 குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. பிரதிவாதி தாவா சொத்தின் பின்புறத்தில் வசிக்கிறார். அதற்கு தென்னிடை பக்கம் உள்ள 3 அடி வழிப்பாதை வழியாக தான் சென்று வர வேண்டும் என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டின் வாசல் எனது தாவா சொத்தின் முன் பகுதிதான் என்று சொன்னால் எனக்கு கேள்வி புரியவில்லை.

2. நான் ஜெயபிரகாஷ் என்பவரிடம் இருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றேன். மேற்படி ஜெயபிராகஷ் என்பவரும் 1ம் பிரதிவாதியும் சகோதரர்கள். பாகபிரிவினைக்கு முன்பு தாவா சொத்தும் 1ம் பிரதிவாதி வசம் இருக்கும் சொத்தும் கூட்டு அனுபவத்தில் தான் இருந்தது. அவர்களுக்கு இடையான பாகபிரிவினையில் அட்டவணை Fல் உள்ள சொத்து எனக்கு விற்பனை செய்தவருக்கு ஒதுக்கப்பட்டு இருந்தது. வா.சா.ஆ.2 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அது நான் கிரையம் பெற்ற ஆவணத்தின் மூல ஆவணம் என்று சாட்சி ஒப்புக் கொண்டார். அந்த ஆவணத்தில் கிழக்கு மேற்கு 23 அடியும், மொத்த சதுரடி 368 என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற மொத்த சதுரடியிலும் நான் கடை கட்டிவிட்டேன். எனது கடை பகுதியில் பிரதிவாதிகள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. சாட்சியிடம் வழக்கின் வாதுரை காண்பிக்கப்பட்டது. சொத்து விவரத்தில் நான் கிரையம் பெற்றது போக கிழக்கு மேற்கு 20 அடி, வடக்கு தெற்கு 10 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதை நான் கிரையம் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் வாங்காத ஒரு பகுதிக்கு தான் தடை

உத்தரவு கேட்டுள்ளேன் என்று சொன்னால் வண்டி நிறுத்தி எனது வியாபாரத்திற்கு இடையூறு செய்வதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சொத்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கிழக்கு மேற்கு 20 அடி, வடக்கு தெற்கு 10 அடி என்பது காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமானது என்று சொன்னால் சரிதான். வழக்து சொத்திற்கு உரிமையாளரான காஞ்சிபுரம் மாநகராட்சியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் அவர்கள் ஆட்சேபிக்காததால் சேர்க்கவில்லை.

4. நான் கிரையம் பெற்றது காலி இடம். தற்போது தாவா சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதை தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. அவ்வாறு கட்டிடம் கட்டுவதற்கு தேவையான அனுமதி பெற்றுள்ளோம். அவ்வாறு அனுமதி வாங்கியுள்ளோம் என்பதை காட்டுவதற்கு இவ்வழக்கில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. முன்பகுதியை நான் அனுபவித்து வந்ததை காட்டுவதற்கு புகைப்படம் தாக்கல் செய்துள்ளேன். அதற்கான வருவாய் ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு கிரையம் கொடுத்த ஜெயபிரகாஷ் என்பவர் அனுபவித்து வந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. நானோ, எனக்கு முன்பு அனுபவித்தில் இருந்தவரோ முன் புற காலி இடத்தில் அனுபவித்தில் இருந்தார்கள் என்பதை காட்டுவதற்கு எனது வாய்மொழி சாட்சியம் தவிர்த்து வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2022ல் பிரதிவாதி என்னிடம் பிரச்சனை செய்தார் என்பதை நிருபிக்கும் ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளோமா என்றால் நாங்கள் அவரை அழைத்து பேசினோம். எனது கடைக்கு முன்பு இருக்கும் காலி இடம் வாகனங்களை நிறுத்துவதற்கான இடம் என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் அவரது வாகனங்களை நிறுத்துவதற்கு அந்த காலி இடம் தான் உள்ளது

என்றால் அவர்கள் நிரந்தரமாக வாகனம் நிறுத்தி எனது வியாபாரத்திற்கு இடையூறு செய்கிறார்கள் . நானும் பிரதிவாதியும் முன்புள்ள காலி இடத்தில் தான் எங்களது வாகனத்தை நிறுத்த முடியும் என்று சொன்னால் காலையும் நானும் இரவில் அவரும் நிறுத்தி கொள்ளலாம். முன்புற காலி இடத்தை நான் தனிப்பட்ட உரிமைக்கோரி இவ்வழக்கு தாக்கல் செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ–9 ஆனது முன்புற காலி இடத்தில் வாகனங்கள் நிறுத்தப்பட்டதை காட்டுவதற்காக தாக்கல் செய்யப்பட்டது. அந்த புகைப்படங்களில் உள்ள வாகனங்கள் பிரதிவாதிகளுடையது மற்றும் எனது கடை வாடிக்கையாளர்களது என்று சொன்னால் சாட்சியிடம் புகைப்படம் காட்டப்பட்டது 3 வாகனங்கள் பிரதிவாதியுடைளது என்று கூறினார் மற்றது தனது கடை வாடிக்கையாளர் வாகனங்கள் என்பதை மறுத்தார். 03.02.2024ல் விஷ்ணுகாஞ்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் அதற்கான சி.எஸ்.ஆர்யை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ –11, 2ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் எழுதி கொடுத்ததாக நான் தாக்கல் செய்துள்ளேன். அந்த விவரங்கள் சரிதான் அதில் உள்ள சரகத்தின் படி நடந்து கொள்ள ஆட்சேபனை எதுவும் கிடையாது.

7. வா.சா.ஆ–12 நான் காவல் நிலையத்தில் எழுதி கொடுத்தது என்று சொன்னால் சரிதான். அதில் எழுதி கொடுத்துள்ளவாறு நடந்து கொள்ள எனக்கு சம்மதம். அந்த ஆவணத்தில் வாகனங்களை இருவரும் நிறுத்தி கொள்ளலாம், இருவரும் சேர்ந்து பராமரித்து கொள்ளலாம் என்று ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். முன்புற காலி இடத்தில் இருவரும் வாகனம் நிறுத்த நான் ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். ஆகவே அந்த இடத்தில் நான் தனி உரிமை கோர முடியாது என்றால் சரிதான். நகராட்சியை வழக்கில்

தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல.

8. பிரிதிவாதிகளும் எனக்கு விற்பனை செய்த நபர்களும் முன்புற இடத்தை வாகனத்தை நிறுத்தி வந்தார்கள் ஆகவே நான் வாங்கிய பிறகு நான் தான் வேண்டுமென்றே பிரச்சனை செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது 368 சதுரடிக்கு சம்மந்தமானது வழக்கு சொத்திற்க சம்மந்தம் இல்லாதது என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் வாங்காத இடத்தை வழக்கு சொத்தாக காட்டி தவறுதலாக பரிகாரம் கோரியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஆகவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(S/d.Tmt.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.